**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

அ.வ.எண். 360/2018 (Joint trial with OS.No.33/2019) வா.சா. 2. சக்திவேல்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 11.08.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | சக்திவேல் | தொழில் | - | |
| த/பெ க/பெ | - | ராமசாமி | ஜாதி | - | |
| கிராமம் | - | ஆனைமலை | வயது | - | 53 |
| தாலூக்கா | - | ஆனைமலை | தேதி | - | 11.08.2025 |

முதல் விசாரணை

நான் ஆனைமலையில் குடியிருக்கிறேன். நான் எனது ஆதார் அட்டை நகலை தாக்கல் செய்கிறேன். ( **வா சா 2 ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் சா சா ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

எனக்கு வாதி , பிரதிவாதிகளை தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகள் என் உறவினர் என்றால் சரிதான். வழக்குச்சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் என் தந்தை ராமசாமி முதலியாருக்கு பாத்தியப்பட்டது. மேற்படி ராமசாமி முதலியார் எப்போது இறந்தார் என்றால் 2007 ல் இறந்தார். என் தந்தைக்கு யார் யார் வாரிசுகள் என்றால் நானும், மீனாட்சி, பாக்கியம், தர்மராஜ் மற்றும் ஆறுச்சாமி ஆகிய என் சகோதர, சகோதரிகள் என் தந்தையின் வாரிசுகள் ஆவர். என் தந்தை இறப்பிற்கு பின் வழக்குச்சொத்துக்களை யார் அனுபவித்துவந்தார்கள் என்றால் என்தந்தையின் வாரிசுகளான நாங்கள் தான் கூட்டா அனுபவித்தோம். பின்னர் 24.05.2018 ம் தேதி யன்று நாங்கள் வழக்குச்சொத்துக்களை பாகம்பிரித்து கொண்டோம்.

பாகம்பிரித்த சொத்துக்களை என்ன செய்தோம் என்றால் நாங்கள் வாரிசுகள் ஐவரும் வழக்குச்சொத்துக்களை வாதிக்கு 10.07.2018 அன்று விற்றுவிட்டோம். என் தந்தை தன்காலத்தில் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் ஜீ. ராமசாமி க்கு ஏதாவதுஇடம் கொடுத்தாரா என்றால் க.ச.எண் 75/3 ல் தென்கோட்டில் கிழமேல் 166 லிங்ஸ் , தென்வடல் 12 லிங்ஸ் என 1 செண்ட் பரப்பளவு நிலத்தை வண்டித்தடமாக கொடுத்தார். அதனை எழுத்துமூலமாக 15.12.1970 ல் பத்திரமாக பதிவு செய்துள்ளார். மேற்படி தடத்திற்கு தென்புறம் யார் சொத்து உள்ளது

என்றால் ஆதியில் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டு தற்போது வாதிக்கு பாத்தியப்பட்டுள்ள சொத்து உள்ளது. அதன்அகலம் எவ்வளவு என்றால் 4 அடி இருக்கும்.

2

மேற்படி தடத்திற்கு கிழபுறமும் மேல்புறமும் யார் சொத்து உள்ளது என்றால் பிரதிவாதிகளின் சொத்து உள்ளது. மேற்படி தடத்திற்கு வடபுறம் யார் சொத்து உள்ளது என்றால் ஆதியில் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டு தற்போது வாதிக்கு பாத்தியப்பட்டுள்ள சொத்து உள்ளது. என் தந்தை காலத்திலும் தற்போதும் பிரதிவாதிகள் எந்த தடத்தை பயன்படுத்தி வந்தார்கள் என்றால் நான் மேற்சொன்ன வண்டித்தடத்தை தான் பயன்படுத்தி வருகிறார்கள். பிரதிவாதிகள் எப்போதாவது க.ச.எண். 75/3 காலையின் மத்தியில் வண்டித்தடமாக பயன்படுத்தி உள்ளார்களா என்றால் இல்லை. 166 லிங்ஸ் நீளம் கொண்ட தடமானது க.ச.எண். 75/3 காலையின் மத்தியில் அமைந்திருந்தால் அது பிரதிவாதிகள் சொத்தை சென்றடையுமா என்றால் அடையாது. அவ்வாறு மத்தியில் அமைந்தால் அது முக்கால் வாசி சொத்தையே கடக்க இயலும். தென்கோட்டில் மட்டுமே அந்த நீள தடத்தை கொண்டு அந்த காலையை முழுமையாக கடக்க இயலும்.

வழக்கு சொத்திற்கு மேற்கில் உள்ள பிரதிவாதிகளின் பூமிக்கு நீர் பாசனம் உள்ளதா என்றால் அதற்கு ஆழ்துளை கிணறு உள்ளது அதன்மூலம் பாசனம் ஏற்படுகிறது. வண்டித்தடத்தில் பைப் லைன் அமைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதனால் வாதி , பிரதிவாதிகளுக்கு பிரச்சனை என்றால் பிரதிவாதிகள் எங்களிடம் குறைந்த விலைக்கு வழக்குச்சொத்தை கேட்டார்கள் நாங்கள் அதனை மறுத்து வாதிக்கு அதிக விலைக்கு விற்றதால் பிரதிவாதிகள் வாதியிடம் பிரச்சனை செய்துவருகிறார்கள்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒப்பம் /- ( M.S.ஸ்ரீநாத்)

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி